# நாமக்கல் மாவட்டத்திற்கு தனியாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஏற்படுத்திட அனுமதி வழங்குக!

## மும்பை நபார்டு வங்கியில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. கோரிக்கை!

நாமக்கல், நவ.4-

நாமக்கல் மாவட்டத்திற்கு தனியாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஏற்படுத்திட அனுமதி வழங்க வேண்டும் என மும்பை நபார்டு வங்கியில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி கோரிக்கை விடுத்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்திற்கு தனியாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஏற்படுத்திட அனுமதி வழங்குமாறு நபார்டு வங்கி மும்பை முதன்மை பொது மேலாளர் சுதிர் ராய் - ஐ சந்தித்து நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கடிதம் வழங்கியுள்ளார்.

இக்கடிதத்தில் 1996 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்திலிருந்து நாமக்கல் வருவாய் மாவட்டம் பிரிக்கப்பட்டது, நாமக்கல் மாவட்டத்தில் ஏராளமான பால் பண்ணை மற்றும் கோழிப் பண்ணைகள் உள்ளன என்பதையும், இம்மாவட்டத்தில் உள்ள பெரும்பான்மையான மக்கள் மேற்கண்ட பணிகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், நாமக்கல் மாவட்டத்தில் 1000 க்கும் மேற்பட்ட பல்வேறு கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. விவசாயக் கடன் சங்கம், பால் பண்ணை சங்கம், கைத்தறி நெசவாளர் சங்கங்கள். சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில், நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு சங்கங்கள் மற்றும் பொதுமக்களிடம் இருந்து, 1000 கோடி ரூபாய் டெபாசிட் செய்யப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நாமக்கல் மாவட்டம் உருவாக்கப்பட்டு 25 ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்ட நிலையில், நாமக்கல் மாவட்டத்திற்கென தனியாக மத்திய கூட்டுறவு வங்கி இல்லை.

தற்போது, நாமக்கல் மாவட்டத்திற்கு புதிய மத்திய கூட்டுறவு வங்கி தொடங்குவதற்கான சாத்தியக்கூறு ஆய்வுக்காக தமிழக அரசு, கூட்டுறவு சங்கப் பதிவாளர் குழுவை அமைத்துள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கண்ட குழுவில் நபார்டு வங்கியின் பிரதிநிதியும் உறுப்பினராக உள்ளார். நாமக்கல் மாவட்டம் தொழில் துறையில் அதிக திறன் கொண்டதோடு, மாநிலத்தில் வேகமாக வளரும் மாவட்டமாகவும் உள்ளது.

மேலும், நாமக்கல் மாவட்டத்திற்கான இங்கு செயல்படும் சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி போல் முழுத் திறனுடன் புதிதாக தொடங்கப்படும் மத்திய கூட்டுறவு வங்கியும் ஸ்திரமாகச் செயல்படும்.

தற்போது, இந்திய அரசின் கூட்டுறவு அமைச்சகம், வணிகர்கள், சிறு வணிகர்கள் மற்றும் விவசாயிகளை மேம்படுத்துவதற்காக நாடு முழுவதும் புதிய கூட்டுறவு சங்கங்கள்/வங்கிகள் நிறுவப் படும் என்று புதிய கொள்கையை உருவாக்கியுள்ளது.

இந்த தருணத்தில். தமிழ்நாட்டில் நாமக்கல் மாவட்டத்திற்கு தனியாக ஒரு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியை நிறுவுவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன் என அம்மனுவில் குறிப்பிட்டுள்ளார்.



நாமக்கல் மாவட்டத்திற்கு தனியாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஏற்படுத்திட அனுமதி வழங்குமாறு மும்பை நபார்டு வங்கி முதன்மை பொது மேலாளர் சுதிர் ராய்யை சந்தித்து நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் கடிதம் வழங்கியுள்ளார்.

---

பால் உற்பத்தியாளர்கள் - நுகர்வோர் கூட்டுறவு சங்கப் பணியாளர்களின் நலன் கருதி

# கலைஞர் தொடக்க பால் கூட்டுறவு சங்கப் பணியாளர்கள் நலநிதி!

## அமைச்சர் மனோ தங்கராஜ் அறிவிப்பு!

சென்னை, நவ.4-

"கலைஞர் நலநிதி திட்டம்" குறித்து பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் அறிவிப்பு வருமாறு:-

தமிழ்நாடு பால்வளத்துறையின் கீழ் செயல்படும் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் / நுகர்வோர் கூட்டுறவு சங்கப் பணியாளர்களின் நலன் கருதி "கலைஞர் தொடக்க பால் கூட்டுறவு சங்கப் பணியாளர்கள் நலநிதி" திட்டத்திற்கு தமிழக அரசு அனுமதி வழங்கி அரசாணை வெளியிட்டுள்ளது.

இத்திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் விதிமுறைகள் வரையறுக்கப்பட்டு செயல்படுத்தப்படும். மேலும் இத்திட்டத்தின் நிதி பராமரிப்பு மற்றும் எதிர்கால செயல்பாடுகள் அரசு நடைமுறைகளின்படி வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

தமிழக பால்வளத்துறை முதன் முறையாக சங்கப் பணியாளர்களுக்கு இம்மாதிரியான "கலைஞர் நலநிதி" திட்டத்தினை செயல்படுத்தியுள்ளது. சங்கப் பணியாளர்களுக்கு விபத்து இறப்பு இழப்பீட்டுத் தொகை, உறுப்பு இழப்பு இழப்பீட்டுத்தொகை, இரண்டு வாரிசுதாரர்களுக்கு உயர்கல்வித் தொகை, இரண்டு பெண் வாரிசுதாரர்களுக்கு திருமண உதவித்தொகை மற்றும் இயற்கை மரண இழப்பீட்டுத்தொகை ஆகியன இத்திட்டத்தின் மூலம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் த.மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

---

வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி:

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



காஞ்சிபுரம், நவ.04-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்திலுள்ள கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் 01.01. 2024ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு புகைப்படத்து டன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தத்தினை இந்தியத் தேர்தல் ஆணையம் கீழ் காணும் அட்டவணையின்படி அறிவித்துள்ளது. காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்திலுள்ள காஞ்சிபுரம், உத்திரமேரூர், மதுராந்தகம், செய்யூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளிலும், 27.10. 2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இன்று (04.11.2023 - சனிக்கிழமை), நாளை (05.11.2023 - (ஞாயிற்றுக்கிழமை) - 18.11.2023 (சனிக்கிழமை) மற்றும் 19.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்ப ட்ட மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளன.

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன்வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2024 அன்று 18 வயது நிரம்பக்கூ டிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2024 ஆம் ஆண்டு ஜனவரி 1-ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இது வரை இடம் பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கி றேன். வரைவு வாக்காளர் பட்டியல் - 27.10.2023 அன்று வெளியிடப்பட்டுள்ளது. பெயர்களைச் சேர்க்க / நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்ககால அவகாசம் -27.10.2023 முதல் 09.12.2023 வரை.

சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் 04, 05.11. 2023 மற்றும் 18, 19.11.2023

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் - 01.01.2024

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகர மேயர், நகரமன்ற, பேரூராட்சி மன்ற, ஊராட்சி மன்ற தலைவர்கள், துணை த்தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (Blc) மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்ட கழகத்திற்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2க்கள் இந்த பணியினை முழுமையாக இருந்து நாடாளுமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLOஉடன் இருந்து கண்காணிக்க வேண்டும்.

இவ்வாறு க.சுந்தர் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

நொளம்பூர் வே.ராஜன் பங்கேற்பு!

# 146வது வட்டத்தில் பாக முகவர்கள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் எம்.ரூபன் அறிக்கை!

சென்னை, நவ.4-

மதுரவாயல் வடக்குப் பகுதி 146வது வட்டக் கழக பாக முகவர்களின் ஆலோசனைக் கூட்டம் இன்று (4.11.2023- சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு வட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறுகின்றது.

இக்கூட்டத்திற்கு வட்ட அவைத் தலைவர் டி.எஸ்.மகாதேவன் தலைமை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் மதுரவாயல் வடக்குப் பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் கலந்துகொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

அதுபோது நாளை (5.11.2023) கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறும் பாக முகவர்கள் பயிற்சி பாசறைக் கூட்டம், வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் மற்றும் கழக ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசிக்கப்படவிருப்பதால் மாவட்ட துணை அமைப்பாளர்களும், பகுதி அணிகளின் அமைப்பாளர்களும், வட்டக்கழக நிர்வாகிகளும், பாக முகவர்களும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமாய் 146வது வட்டச் செயலாளர் மதுரவாயல் எம்.ரூபன் கேட்டுக்கொண்டுள்ளார்.

---




சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் மாத்தூர் காமராஜர் சாலையில் நீட் தேர்வுக்கு விலக்கு கோரி பொதுமக்களிடம் கையெழுத்து பெரும் நிகழ்ச்சி பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கையெழுத்து இயக்கத்தை துவக்கி வைத்தார். கா.தாமரைச்செல்வன் வரவேற்பில் மாவட்ட துணைச் செயலாளர் அறிவழகி பாலகிருஷ்ணன், ஆர்.டி.மதன்குமார், சி.எஸ். எஸ்.பி.சீனிவாசன், கேபிள் தா.கணேசன், ஜி.கே.இனியன், இ.கண்ணப்பன், கே.கருணாகரன், பி.எஸ்.சந்துரு, வி.ஆர்.குப்பன், கே. அங்குசாமி, வி.திராவிடவீரன், க.சிவசங்கரன், க.காசிநாதன், நா.மோகன்குமார், நாகூரார் பா.சந்திரன், பி.நிர்மல்குமார், வி.கார்த்திகேயன், மஞ்சம்பாக்கம் ஆர்.பாபு உள்ளிட்ட பலர் முன்னிலை வகித்தனர். ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் மாணவர்கள் இளைஞர்கள் கலந்து கொண்டு நீட் தேர்வுக்கு விலக்கு கோரி கையெழுத்திட்டனர்.

---

புழல் எம்.நாராயணன் தலைமை! அறிவழகி பாலகிருஷ்ணன், ஆர்.டி.மதன்குமார், டி.சீனிவாசன், த.கணேசன், ஜி.கே.இனியன் முன்னிலை!

# மாதவரம் மாத்தூரில் நீட் விலக்கு கோரி கையெழுத்து இயக்கம்: மாதவரம் எஸ்.சுதர்சனம் துவக்கி வைத்தார்!

## கா.தாமரைச்செல்வன், இ.கண்ணப்பன், கே.கருணாகரன், பி.எஸ்.சந்துரு, வி.ஆர்.குப்பன் வரவேற்பு!

சென்னை, நவ.4-

கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் விளையாட்டு மற்றும் சிறப்பு அமலாக்கத் திட்ட துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில் தமிழ்நாடு முழுவதும் இளைஞர் அணி மாணவர் அணி மருத்துவர் அணி சார்பில் நீட் தேர்வுக்கு விலக்களிக்க வேண்டும் என்று கூறி குடியரசுத் தலைவருக்கு பொதுமக்களிடம் கையெழுத்து பெற்று அனுப்பும் பணி நடைபெற்று வருகிறது.

அதன் ஒரு பகுதியாக சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் மாத்தூர் 19வது வட்டம் முதல் பிரதான சாலை சந்திப்பில் நீட் விலக்கு கோரி பொதுமக்களிடம் கையெழுத்து பெற்றார்கள்.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு 19 வது வட்ட செயலாளர் மாத்தூர் கா.தாமரைச்செல்வன் வரவேற்புரை ஆற்றினார்.

அறிவழகி பாலகிருஷ்ணன், ஆர்.டி.மதன்குமார், சி.எஸ்.எஸ்.டி.சீனிவாசன், கேபிள் த.கணேசன், ஜி.கே. இனியவன், இ.கண்ணப்பன், கே.கருணாகரன், பி. எஸ்.சந்துரு, வி.ஆர்.குப்பன் கே அங்குசாமி, வி.திராவிடவீரன், கா.சிவசங்கரன், கா.காசிநாதன், நா.மோகன்குமார், நாகூரார் பா.சந்திரன், பி.நிர்மல் குமார், வி.கார்த்தி கேயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பொதுமக்களிடத்திலே நீட் விளக்கு பற்றி பொதுமக்களிடத்திலே துண்டு பிரசுரங்கள் வழங்கி கையெழுத்து இயக்கத்தை துவங்கி வைத்தார். மேலும் விதி வீதியாக சென்று கடைகள் தோறும் பொது மக்களுக்கும் இளைஞர்களுக்கும் மாணவர்கள் இளைஞர்களுக்கு துண்டு பிரசுரங்களை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மஞ்சம்பாக்கம் ஆர்.பாபு, எஸ். கோபாலகிருஷ்ணன், எஸ்.உதயகுமார், பா. கோபிநாத், பீர்முகமது, ஜெயராஜ், துரை, தசரதன், துரைசாமி, எஸ்.கருணாகரன். பேன்சி ரமேஷ். அமுதா மணிராஜ். ஆர். சுதா, கே.சண்முக பிரியன், தி.வினோத், ஜி.ராஜ்குமார், எஸ்.சிவக்குமார், எம்.என்.அஜய் தென்னவன், வக்கீல் டில்லிபாபு, ஷியாம், ஆனந்த், தினேஷ் குமார், பி.தினேஷ்குமார், ஜி.வெங்கடேஷ், சி.முத்தையா, பரசுராமன், வி. சிவப்பிரகாஷ், டோமினி பிரான்சிஸ், தேவராஜ், செமின் எடிசன், ஜி.நித்தியானந்தம், மஞ்சுநாதன் ரிஷி, ராமராஜபுரம் கிருபாகரன், பாலாஜி விமூர்த்தி என் நாகராஜன் விஸ்வநாதன் பி விக்னேஷ் எஸ் விஜயன் எம் என் தளபதி சரவணன் (எ) ரகுவரன், துளசி, ஹரி, சுப்பிரமணி, கதிரவன், கோவர்தனன், ஐ.சி.எஃப்.விஜயகுமார், கே.குமார், சின்ன மாத்தூர் காசி, எஸ்.எஸ். கே.செல்வகுமார், கங்காதரன், ஜானகிராமன், சுரேஷ் குமார், ராஜேஷ், கண்ணன், சுமன், சதீஷ்குமார், ஹரி, பிரசாத், ரவிக்குமார், நாகராஜ், சோமு, சேவை செல்வராஜ் ஞானசேகர் பிரவீன் குமார் அண்ணாதுரை சசிகுமார் சாந்தா சரஸ்வதி, பெரியநாயகி கஸ்தூரி, சுந்தரி, கலைச்செல்வி, விக்னேஸ்வரன், மேக்சீலா, உதயகுமார், தங்கவேலு, சி.தீபக், எம். கார்த்திக், அனுராக், சிங், ஜெகன், சுதாகர் ஹரி ஜே. சாமிநாதன் பி வாசு ஜி அந்தோணி ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

---

நீட் தேர்வை எதிர்த்து

# ஆவடியில் மாபெரும் கையெழுத்து இயக்கம்!

## ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார் !

திருவள்ளூர் நவ 04;

நீட் விலக்கு நம் இலக்கு மாபெரும் கையெழுத்து இயக்கத்தின் ஒரு அங்கமாக கையெழுத்து இயக்க பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி மாநகர கிழக்கு வடக்கு மேற்கு பகுதியில் சார்பில் நீட் தேர்வினை ரத்து செய்திட ஒன்றிய அரசினை வலியுறுத்தி திருமுல்லைவாயல் பச்சையம்மன் கோவில், ஆவடி பேருந்து நிலையம், மிட்டணமல்லி உள்ளிட்ட பகுதியில் மாபெரும் கையெழுத்து இயக்க முகாம்கள் அமைக்கப்பட்டு கையெழுத்து பெரும் பணிகள் நடைபெற்றது இதில் மாநகர பகுதி கழக செயலாளர்கள் சன்.பிரகாஷ், பேபிசேகர், ஜி.நாராயண பிரசாத், பொன்.விஜயன் வரவேற்புரை ஆற்றினார்கள்

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார், ஆவடி மாநகர இளைஞரணி அமைப்பாளர் துர்கா பிரசாந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் தலைமையில் பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகள் பேருந்து பயனாளிகளிடம் வியாபாரிகளிடம் நீட் தேர்வு எதிர்த்து கையெழுத்து பெறப்பட்டது.

மாபெரும் கையெழுத்து இயக்க முகாம்களில் பொது மக்கள் உட்பட பள்ளி கல்லூரி மாணவர்கள் என ஏராளமானோர் தங்களது நீட் விலக்குக்கு ஆதரவு தெரிவித்து நீண்ட நேரம் வரிசையில் நின்று கையெழுத்துக்களை பதிவு செய்தனர்.

இந்நிகழ்ச்சியில் ஆவடி மாநகர மேயர் ஜி உதயகுமார், ஆவடி மாநகர மண்டல தலைவர்கள் ஜோதிலட்சுமி, அமுதா பேபிசேகர், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வி.தியாகராஜன், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் க.ராஜேஷ் குமார், வட்ட கழகம் செயலாளர்கள். சக்திவேல், ஜெயந்தன், பார்த்தசாரதி, இளங்கோவன்,மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் அக்னி ராஜேஷ், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் இள. ஸ்ரீதர், முஸ்தபா அஃப்ரிடி, சதீஷ், புவனேஷ்குமார், மகேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் வட்ட கழக செயலாளர்கள் கவுன்சிலர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

---

திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில்

# வாக்காளர் சிறப்பு முகாம் கண்காணிப்பு குழு!

## மாவட்ட கழகச் செயலாளர் - திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!



கழகத்தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள திருத்தணி மற்றும் திருவள்ளூர் சட்டமன்ற தொகுதிகளில் இந்திய தேர்தல் ஆணையத்தால் வருகிற நவம்பர் 4 (சனிக்கிழமை), நவம்பர் 5 (ஞாயிற்றுக்கிழமை) மற்றும் நவம்பர் 18 (சனிக்கிழமை), நவம்பர் 19 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நான்கு நாட்கள் நடைபெற உள்ள சிறப்பு முகாம்களை கண்காணிக்க கீழ்க்கண்டவாறு கண்காணிப்பு குழு நியமிக்கப்படுகிறது.

### திருத்தணி சட்டமன்றத் தொகுதி

| ஒன்றியம்/நகரம்/பேரூர் | கண்காணிப்பு குழுவில் ஈடுபட உள்ள அணிகள் விவரம் |
|---|---|
| திருத்தணி கிழக்கு ஒன்றியம் | - தகவல் தொழில்நுட்ப அணி & மருத்துவ அணி |
| திருத்தணி மேற்கு ஒன்றியம் | - நெசவாளர் அணி & சிறுபான்மை பிரிவு அணி |
| திருத்தணி நகரம் | - இளைஞர் அணி |
| ஆர்.கே.பேட்டை கிழக்கு ஒன்றியம் | - மாணவர் அணி |
| ஆர்.கே.பேட்டை மேற்கு ஒன்றியம் | - அமைப்புசாரா ஓட்டுநர் அணி |
| பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியம் | - விளையாட்டு மேம்பாட்டு அணி |
| பள்ளிப்பட்டு தெற்கு ஒன்றியம் | - அயலக அணி & கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அணி |
| பள்ளிப்பட்டு மத்திய ஒன்றியம் | - ஆதிதிராவிட நலக்குழு அணி |
| பள்ளிப்பட்டு பேரூர் | - இலக்கிய அணி |
| பொதட்டூர்பேட்டை பேரூர் | - விவசாய தொழிலாளர் அணி |
| திருவாலங்காடு மேற்கு ஒன்றியம் | வழக்கறிஞர் அணி |

### திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதி

| ஒன்றியம்/நகரம்/பேரூர் | கண்காணிப்பு குழுவில் ஈடுபட உள்ள அணிகள் விவரம் |
|---|---|
| திருத்தணி கிழக்கு ஒன்றியம் | - தகவல் தொழில்நுட்ப அணி & மருத்துவ அணி |
| திருத்தணி மேற்கு ஒன்றியம் | - நெசவாளர் அணி & சிறுபான்மை பிரிவு அணி |
| திருத்தணி நகரம் | - இளைஞர் அணி |
| ஆர்.கே.பேட்டை கிழக்கு ஒன்றியம் | - மாணவர் அணி |
| ஆர்.கே.பேட்டை மேற்கு ஒன்றியம் | - அமைப்புசாரா ஓட்டுநர் அணி |
| பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியம் | - விளையாட்டு மேம்பாட்டு அணி |
| பள்ளிப்பட்டு தெற்கு ஒன்றியம் | - அயலக அணி & கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அணி |
| பள்ளிப்பட்டு மத்திய ஒன்றியம் | - ஆதிதிராவிட நலக்குழு அணி |
| பள்ளிப்பட்டு பேரூர் | - இலக்கிய அணி |
| பொதட்டூர்பேட்டை பேரூர் | - விவசாய தொழிலாளர் அணி |
| திருவாலங்காடு மேற்கு ஒன்றியம் | - வழக்கறிஞர் அணி |

அதுசமயம் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் உள்ளிட்டோர் இணைந்து சிறப்பு முகாம்களில் ஈடுபட உள்ளனர். மேற்கண்ட அணிகளின் நிர்வாகிகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக்கான ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்களுடன் இணைந்து மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சிறப்பு முகாம்களில் வாக்காளர் பெயர் சேர்த்தல், நீக்கல், இடமாற்றம் உள்ளிட்ட சரிபார்ப்பு பணிகளை மேற்கொண்டு முகாம்களில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் படிவங்கள் குறித்த முழு விவரங்களை மாவட்ட கழகத்திற்கு புகைப்படத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ.**

செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.